முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

**அ.வ.எண். 129/2019**

நாள். 17.02.2026 வா.சா.1 – திருமதி.கனகபூபதி

க/பெ - திரு.தங்கபாண்டியன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) வா.சா.ஆ.1 ஆவணத்தை படித்து பார்த்துள்ளீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ல் உள்ள தபசில் சொத்துக்களுக்கு சர்வே எண் சொல்லப்படவில்லை என்றால் சரி தான், ஆனால் வார்டு நம்பர் எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ல் மனைவரி தோராய பட்டா என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 பட்டாப்படி எத்தனை செண்டு போடப்பட்டுள்ளது என்றால் 5 1/2 செண்டு போடப்பட்டுள்ளது. அ.வ.எண்.125/2012 என்ற வழக்கை தாக்கல் செய்து ஒரு தீர்ப்பாணை பெற்றுள்ளதாக கூறுகிறீர்கள், அதன் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

2) வா.சா.ஆ.6 தீர்ப்பாணையில் சர்வே எண். 1415/5, 1415/6 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தின் சர்வே எண். 1412/5 மற்றும் 1412/6 என்றால் சரி தான். அ.வ.எண்.125/2012 வழக்கில் கண்ட தீர்ப்பாணை இந்த பிரதிவாதிகளை

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.03.17 14:25:55 +0530

கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அந்த வழக்கில் கண்ட சொத்துக்கள் வேறு என்றும் இந்த வழக்கில் கண்ட சொத்துக்கள் வேறு என்றால் எனக்கு தெரியாது.

3) இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்ய வந்தார் என்றால் சரி தான். சர்வேயர் உதவி உடன் இடத்தை அளவீடு செய்தார் என்றால் சரி தான். நீதிமன்ற ஆணையர் எங்கள் இடம் சரியாக இருக்கிறது என்று கூறினார். சர்வேயர் இடத்தை அளந்து ஒரு மாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கையை நீங்கள் படித்து பார்க்கவில்லை என்றால் படித்து பார்க்கவில்லை.

4) நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் எந்த அளவுகளும் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரி தான். அளவுகள் சரியில்லாத காரணத்தினால் மீண்டும் நீதிமன்ற ஆணையர் அளக்க வருவதாக கூறினார். மறுபடியும் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் நடவடிக்கை எடுத்து வருகிறோம். நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று நீங்கள் கூறுவது பொய் என்றால் சரியல்ல.

5) நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்வதற்கு மீண்டும் மனு தாக்கல் செய்யும் பட்சத்தில் பிரதிவாதிகள் எந்த இடையூறும் செய்ய மாட்டார்கள். மாதிரி வரைபடத்தில்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.03.17 14:26:11 +0530

உங்கள் இடம் எங்கு உள்ளது என்று சொல்ல முடியுமா என்றால் அந்த இடம் 'ட' பகுதியில் தான் உள்ளது. நீதிமன்ற ஆணையர் நிலத்தை அளவீடு செய்யும் போது உண்மையில் புல வரைபடத்தில் இருக்கின்ற அளவுகள் ஸ்தலத்தில் இருக்கின்ற அளவுகளோ ஒத்துப் போகாததால் 'I' புள்ளி குறிப்பாக எந்த இடத்தில் இருக்கின்றது என்று அறுதியிட்டு கூற இயலாது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் அளக்கும் போது இடம் மாற்றமாக உள்ளது ஆனால் எங்கள் இடம் சரியாக உள்ளது என்று நீதிமன்ற ஆணையர் கூறினார்.

6) உண்மையில் மாதிரி வரைபடத்தில் 'I' புள்ளியில் வருவாய் துறையில் புல வரைபடத்தின் அளவுகள் ஸ்தலத்தில் அளந்து காண்பிக்கவோ நிறுவவோ முடியவில்லை என்று நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரி தான். அதே போல் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் I, J, L, H புள்ளிகளுக்கு உட்பட்ட பகுதியில் 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் புதியதாக கட்டப்பட்ட வீடு இருந்தது என்று ஆணையர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான்.

7) சர்வேயர் ஒரு புல வரைபடம் நீதிமன்ற ஆணையரிடம் கொடுத்து அதை நீதிமன்றத்தில் குறியீடு செய்துள்ளார் என்றும் அதில் 1ம் பிரதிவாதி இடம் 6 மீட்டருக்கு பதிலாக 6.1 மீட்டர் இருந்ததாகவும், 2 ம் பிரதிவாதி சர்வே எண். 1412/7 டி - ன் மேற்கு பக்கத்தில் தென் வடல் அளவு 9 மீட்டர் என்றாலும் அதற்கு தெற்கு பக்கத்தில்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.03.17 14:26:17 +0530

உள்ள நாராயண சாமி கோவில் 8.6 மீட்டர் என்பதற்கு பதிலாக 8.3 மீட்டர் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரி தான்.

8) ஏற்கனவே 1ம் பிரதிவாதி ராமச்சந்திரன் புதியதாக வீட்டிற்கு முன்பு ஏற்கனவே ஒரு குடிசை வீடு இருந்தது என்றால் சரி தான். அந்த குடிசை வீட்டைஇடித்து விட்டு தான் பிரதிவாதி வீடு கட்டி உள்ளார் என்றால் சரியல்ல. காம்பவுண்ட் சுவரை இடித்ததாக பிரதிவாதி மீது எந்த குற்ற வழக்கும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கட்டியுள்ள அவரது போர்ட்டிகோ, மற்றும் சன்சைடு அவரது இடத்தில் தான் போட்டுள்ளார் என்றால் சரியல்ல, எங்களுடைய இடத்தில் போட்டுள்ளார்.

9) 1ம் பிரதிவாதி தரப்பில் நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் 1ம் பிரதிவாதி மீது கொண்ட பழைய பொறாமையின் காரணமாக வேண்டுமென்றே பொய்யான தகவல்களுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. தபசில் வீட்டில் தற்போது நீங்கள் இல்லை என்றால் சரி தான். இது சம்மந்தமாக ஊர் மக்கள் போலிஸ் உதவி உடன் அளக்கப்பட்டது என்றால் சரி தான். கவுன்சிலர் மனோரஞ்சிதம் முன்னிலையில் ஒரு சமாதான உடன் படிக்கையில் உங்கள் கணவர் தங்கப்பாண்டி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரி தான்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.03.17 14:26:24 +0530

10) ஏற்கனவே உங்கள் கணவர், ஊர் மக்கள் எல்லாம் கூடி சமாதான உடன் படிக்கையில் செய்ததில் உங்கள் கணவர் கையொப்பம் செய்திருந்தார் என்றால் தெரியாமல் எனது கணவர் கையொப்பம் செய்து விட்டார். பிரதிவாதி எந்த காலத்திலும் உங்களை இடைஞ்சல் செய்யவில்லை என்றும் உங்கள் இடத்தை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும் நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.03.17 14:26:29 +0530